This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# கடவுள் இருக்கிறாரா?

www.writersujatha.com

என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி கடவுள் இருக்கிறாரா? இருக்கிறார் என்றால் அவரைப் பார்க்க முடியுமா?

இதற்கு 'பைனரி'யாக பதில் சொல்ல இயலாத நிலையில், இந்தக் கேள்விக்கு அறிவியல் என்ன சொல்கிறது என்பதை உங்களுடன் சிந்தித்துப் பார்க்க விரும்புகிறேன்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன் நான் 'தேவன் வருகை' என்கிற தலைப்பில் ஒரு விஞ்ஞானக் கதை எழுதினேன். அதில் கடவுள் 'ஒவ்வொரு ஊரிலும் ஒரு பொது இடத்தில் சூரிய உதயத்தின்போது காட்சி தருகிறேன், அதற்குத் தருணம் வந்துவிட்டது' என்று உலகமெங்கும் அறிவித்து விடுவார். இதை அரசாங்கம் ஏதோ புரளி என்று மறுக்கும். இருந்தும் ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவரும் தங்கள் தங்கள் கடவுள்தான் வரப்போகிறார் என்று எதிர்பார்த்து குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலை மைதானங்களில் போய் பரபரப்புடன் ஒருவிதமான மாஸ் ஹிஸ்டீரியாவுடன் காத்திருப்பார்கள்.

அந்தக் கதையின் கடைசி 'பாரா' இதுதான்–

'சூரிய உதயம் ஐந்து ஐம்பத்தெட்டுக்கு.

மணி ஐந்து ஐம்பத்தேழு. ஆரவாரம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கி மௌனம். மிக மிக மௌனம். தூரத்தில் மெதுவாக சோலையை அலைக்கும் காற்று கேட்டது. உறங்கி எழுந்த பட்சிகளின் உற்சாகக் குரல்கள் கேட்டன. எல்லாரும் எதிரே தனியாக அமைக்கப்பட்டிருந்த அந்தக் காலியிடத்தை எதிர் நோக்கியிருந்தார்கள். ஐந்து ஐம்பத்து எட்டு...

ஆறு மணிக்கு அவர்கள் வீடு திரும்பினார்கள்.'

–என முடித்திருந்தேன்.

பலர் என்னிடம் என்ன விளையாடுகிறாயா என்று கோபப்பட்டு எழுதியிருந்தார்கள். அந்தக் கதையில் நான் சொல்ல விரும்பியது கடவுள் அப்படி வந்திருந்தால், அவரை என் போன்ற அற்ப ஜந்துவால் வர்ணிக்க முடிந்திருந்தால் அவர் கடவுளே அல்ல என்பதே.

நம்மாழ்வாரின் 'டைலம்மா'வும் இதுதான்–

*ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா(து) அலியுமல்லன்*
*காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன்*
*பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனுமாம்*
*கோணை பெரிதுடைத்து எம் பெம்மானைக் கூறுதலே.*